பக்கங்கள்: 8

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 சித்திரை 23 செவ்வாய்க்கிழமை (06-05-1997) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:159

# புளியங்குளம் பகுதி மீது விமானக் குண்டு வீச்சு!

## பொதுமக்கள் மூவர் பலி! 13 பேர்காயம்!!

வவுனியா, மே 6

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வவுனியா நகரில் உள்ள படைத்தளங்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய ஆட்லறித் தாக்குதலுக்கு பதிலடியாக புளியங்குளம் பகுதி மீது அன்றைய தினம் விடியற்காலையில் ஸ்ரீலங்காப் படைகள் மேற்கொண்ட ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்களில் மூன்று பொதுமக்கள் உயிரிழந்தனர்; 13 பேர் காயமடைந்தனர்.

ஏஜென்ஸிச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

பணிக்கநீராவி என்ற இடத்தில் லொறிகள் மற்றும் மக்கள் கூட்டம் நிரம்பிய பிரதேசத்தின் மீதே விடிகாலை வேளை இத்தாக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பிரதமர் பிளயருக்கு பிரபாகரன் கடிதம்!

## தமது போராட்டத்துக்கு ஆதரவு கோருகிறார்

கொழும்பு, மே 6

பிரிட்டனின் புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் -- தொழிற் கட்சியின் இளம் தலைவர் -- ரொனி பிளயருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தமது ஒப்பமிட்டு வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார்.

தமிழீழ மக்களின் நியாயமான போராட்டத்துக்கு ஆதரவு தரும்படி அந்த வாழ்த்துச் செய்தியில் அவர் கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

'ரோய்ட்டர்' செய்தி நிறுவனத்தை மேற்கோள்காட்டி 'யெஸ். எவ். எம்.' 'வெரித்தாஸ்' வானொலி ஆகியவை இச் செய்தியை வெளியிட்டன.

புலிகளின் சர்வதேச அலுவலகம் மூலம் இந்த வாழ்த்துச் செய்தி அனுப்பி வைக்கப்பட்டது.

''உங்கள் கட்சி கண்டிருக்கும் மகத்தான வெற்றிக்கும், நீங்கள் பிரதமர் பதவியை ஏற்றிருப்பதற்கும் எமது உண்மையான பாராட்டுதல்களைத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

''உலக அளவிலான வறுமை, இன ஒதுக்கல், சமூக அநீதிகள் என்பனவற்றை அகற்றிஇனிமையானதோர் உலகத்தைப் படைக்க உங்களது திறமையானதும்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே எம்.பிக்கள் விஜயம்

நோர்வே நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆறு பேர் இவ்வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விவரங்களை அறிந்து கொள்வதற்காகவே இவர்கள் இங்கு விஜயம் செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் இவர்கள் பேச்சு நடத்துவர் என்றும் —

அத்துடன் அகதிகளின் நிலைமை குறித்தும் இவர்கள் கவனம் செலுத்துவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## அமெரிக்க உதவி

யாழ்ப்பாணத்தில் தொழில்நுட்பக் கல்வியை மீண்டும் அபிவிருத்தி செய்வதற்கான உதவிகளை வழங்க அமெரிக்கா முன் வந்துள்ளது.

இதற்கான தகவல்கள்,விவரங்களைச் சேகரிப்பதில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பீற்றர் பேர்லி ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# புலிகளுக்குத் தடை விதிக்குமாறு அமெரிக்காவிடம் கோரிக்கை

## அமைச்சர் பீரிஸ் உத்தியோக பூர்வமாக விடுத்தார்

கொழும்பு மே 6

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் அறிவித்து அந்த இயக்கத்துக்குத் தடை விதிக்குமாறு அமெரிக்க அரசை ஸ்ரீலங்கா அரசு உத்தியோக பூர்வமாகக் கோரியிருக்கின்றது.

அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருந்த நீதி, அரசமைப்பு விவகார அமைச்சரும் பிரதி நிதியமைச்சருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் ஸ்ரீலங்கா அரசின் சார்பில் அமெரிக்க அதிகாரிகளிடம் உத்தியோகபூர்வமாக இக் கோரிக்கையை முன்வைத்தார்.

அமெரிக்க விஜயத்தை முடித்துக் கொண்டு அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் நேற்று முன்தினம் கொழும்பு திரும்பினார்.

புலிகளைத் தடை செய்ய தாங்கள் கோருவதற்கான காரணங்களையும்—

விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாத அமைப்பு என்பதை நிரூபிப்பதற்கான ஆதாரங்களையும்—

பேராசிரியர் பீரிஸ் அமெரிக்க அதிகாரிகளிடம் சமர்ப்பித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் நிதி திரட்டுவதற்கு ஆதாரமாக உள்ள ... செய

(8 ஆம் பக்கம் பார்க்க)

# வேவு விமானம் புலிகள் வசம்?

## பாதுகாப்பு வட்டாரங்களில் தகவல்

கொழும்பு, மே 6

கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் இருந்து புறப்பட்ட பின்னர் வன்னிக் காட்டுப் பகுதியில் காணாமல் போனதாகக் கூறப்படும் தானியங்கி வேவு விமானத்தை விடுதலைப் புலிகள் வன்னிப் பகுதியில் தரையிறக்கிவிட்டனர்.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி சிங்கள தனியார் ஒலிபரப்பு செய்தி நிறுவனம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றது.

இந்த விமானத்தை கட்டுப்படுத்தும் அதே சாதனங்களை புலிகளும் பயன்படுத்தியிருக்கலாம் என்றும் —

அதன் மூலம் விமானத்தை அவர்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து தரையிறக்கியிருக்கலாம் என்றும்—

பொதுவாகக் கருதப்பட்டது.

இந்த விமானம் ஓமந்தையில் வீழ்ந்ததாக அறிக்கைகள் கிடைத்துள்ளன என்று விமானப்படை வட்டாரங்கள் கூறியதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே. (உ-21)

# பிளயரைச் சந்திக்க தமிழர்கள் முயற்சி!

மணிலா மே 6

பிரிட்டனில் புதிதாகப் பதவியேற்றுள்ள தொழிற்கட்சிப் பிரதமர் ரொனி பிளயரை சந்திப்பதற்கு லண்டனில் உள்ள தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் முயற்சித்து வருவதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

பிரிட்டனின் பொதுத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய தொழிற்கட்சிப் பிரமுகர்களை நேரில் சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்து வரும் தமிழ்ப் பிரதிநிதிகள், பிரதமர் ரொனி பிளயரையும் சந்தித்து ஈழத் தமிழ் மக்களின் நிலை குறித்து எடுத்துக்கூறி, அவரது ஆதரவைத் திரட்டுவதில் ஆவலாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆட்சிக்கு வந்துள்ள தொழிற் கட்சியின் பிரமுகர்கள் பலர் ஈழத் தமிழருக்கு ஆதரவான போக்கைக் கொண்டவர்கள் என்று கருதப்படுகின்றது. (உ-ஐ)

## ஒலிபரப்பு சட்டமூலத்தை எதிர்த்து

# பத்திரிகையாளர்கள் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, மே 6

இலங்கை அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இலங்கை ஒலிபரப்பு அதிகார சபைச் சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நேற்று சுமார் நூறு பத்திரிகையாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

வெகுஜனத் தொடர்பு அமைச்சுக் கட்டடத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

அரசின் உத்தேச சட்டமூலத்தை தாம் எதிர்க்கவில்லை என்றும் ஒலிபரப்பு அதிகார சபையை அரசு கட்டுப்படுத்துவதற்கு எதிராகவே போராட்டம் நடத்துவதாகவும் பத்திரிகையாளர் லூசியன் இராஜகருணநாயக்கா தெரிவித்தார்.

அரசின் இந்த சட்டமூலத்தை கடுமையாக எதிர்க்கப்போவதாக எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. (ஐ-10)

# மட்டக்களப்பில் பாதுகாப்பு தீவிரம்

கொழும்பு, மே 6

வெடிகுண்டுகள் சகிதம் இரு இளைஞர்களும், யுவதிகளும் ஊடுருவியுள்ளதாகக் கிடைத்துள்ள தகவலை அடுத்து மட்டக்களப்பு நகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நேரம் குறித்து வெடிக்க

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் மூலம் அனுப்பப்படவுள்ள

# இந்திய உதவிப் பொருள்களை பருத்தித்துறையில் இறக்கத்திட்டம்

கொழும்பு, மே 6

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கு உதவியாக இந்திய அரசு வழங்கவுள்ள கட்டடப் பொருள்களை இந்தியாவில் இருந்து எடுத்து வந்து பருத்தித்துறை துறைமுகத்தில் இறக்குவது குறித்து கொழும்பில் ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் இருந்து நேரடியாக எடுத்துவரப்படவுள்ள இந்தப் பொருள்களை காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்குவதில் பாதுகாப்பு பிரச்சினைகள் இருப்பதால் அவற்றைப் பருத்தித்துறை துறைமுகத்தில் இறக்குவது குறித்து தற்போது ஆலோசிக்கப்படுவதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

சிமெந்து, கூரைத்தகடு

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர்
## விவசாய சம்மேளன அமைப்பு
## அங்குரார்ப்பணக் கூட்டம்

**05 - 05 - 97** ஆம் திகதி காரைநகர், உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பெரும்பாக உத்தியோகத்தர், திரு. சோ. பரமசிவராசா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உதவி தீவக அரசியல் பொறுப்பாளர் திரு. ந. லோகன் அவர்களும் கலந்து கொண்டார்.

அதில் வேலணை - புங்குடுதீவு விவசாய போதனாசிரியர்களும் கலந்து கொண்டனர், சம்மேளனத்தில் நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

திரு. கா. குலசேகரம் — தலைவர்
திரு. க. ஆறுமுகம் — உபதலைவர்
திரு. செ. சண்முகம் — செயலாளர்
திரு. ந. சச்சிதானந்தம் — பொருளாளர்
திரு. க. சுப்பிரமணியம் — உபசெயலாளர்

உறுப்பினர்கள்:-
செ. தர்மராசா
த. அன்னலெட்சுமி

போசகர்:-
சு. இராமச்சந்திரன்
சி. கணேசபிள்ளை

தலைவர்
**விவசாய சம்மேளனம்**
**காரைநகர்**

(சி/668)

## முல்லையில் சூறாவளி

கொழும்பு, மே 6

முல்லைத்தீவுப் பகுதியில் கடந்த சனியன்று 'மினி' சூறாவளி ஒன்று வீசியது. இரண்டு மணித்தியாலங்கள் கடும் மழையுடன் வீசிய பலத்த காற்றினால் வீடுகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது.

இடம்பெயர்ந்து குடிசைகளில் தங்கியிருந்த மக்கள் பெரிதும் அவலப்பட்டனர்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலேயே அதிக சேதம் ஏற்பட்டது. பல வீட்டு ஓடுகளும் குடிசை வீடுகளின் ஓலைக் கூரைகளும் தூக்கி வீசப்பட்டன. (உ)

## பிரதேச சபையின் வரவு-செலவு

தென்மராட்சி, மே 6

சாவச்சேரி பிரதேச சபையின் இந்த வருடத்துக்கான உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் மொத்த வருமானமாக 76 லட்சத்து 95 ஆயிரத்து 988 ரூபாவும், மொத்த செலவீனமாக 76 லட்சத்து 95 ஆயிரத்து 889 ரூபாவும் எதிர்பார்க்கப்படுகிறது. (இ-117)

## வேம்படி, மகளிர் கல்லூரி
## முறைசாராக் கல்வி

**பயிற்சி நெறி:- ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து**

மேற்படி பயிற்சி நெறிக்கு தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: **15 — 05 — 1997**

— அதிபர்

(சி/667)

## யாழ்ப்பாண மாநகரசபை
## GUM BOOTS கொள்வனவு

மாநகரசபையின் சுத்திகரிப்புப் பணியாளர்கள் பயன்படுத்தக்கூடிய நீர் உட்புகாத இறப்பர் சப்பாத்துக்கள் (Gum Boots) விநியோகிக்கக் கூடியவர்கள் விலை விவரங்களுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

ஏற்கனவே பாவிக்கப்பட்டவையாயினும் தரமான நிலையில் இருப்பின் அவற்றினையும் கொள்வனவு செய்வதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**வே. பொ. பாலசிங்கம்,**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 1997-05-05

(சி/672)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி மகாலிங்கம் (செல்லையா)

கோப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட சி. மகாலிங்கம் 05 - 05 - 1997 இல் காலமானார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற விஜயகுமாரன், ஜெயக்குமாரன், வசந்தகுமாரன் (பிரான்ஸ்), செல்வகலா, வர்ணகுமாரன் (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும், பாலச்சந்திரன் (இலங்கை வங்கி), வதனராணி (ஆசிரியர்) ஆகியோரின் மாமனாரும், டினோசாவின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06 - 05 - 1997) முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ம. ஜெயக்குமாரன்
(மகன்)

இராச வீதி,
கோப்பாய்.

(46759)

## திருமதி தவமணி நல்லதம்பி

அல்வாய் தெற்கைச் சேர்ந்த வில்லி தவமணி 04- 05- 1997 அன்று மகிமைக்குள் பிரவேசித்தார்.

அன்னார் J. S. நல்லதம்பி (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், ராஜினி (ஜேர்மனி), பாமினி (சுவிஸ்) நிர்மலன் (கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூட்டுறவு சங்கக்கிளை முகாமையாளர்), நிமலினி (உபதபாலதிபர், அல்வாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசேந்திரம் (ஜேர்மனி), கிரிஷ்டி பாலகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 05- 05- 97 இல் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
J. S. நல்லதம்பி
(கணவர்)

அல்வாய் தெற்கு,
அல்வாய்.

(46754)

## வி. குமாரவேலு சண்முகநாதன்
(இளைப்பாறிய ஆயுள்வேத வைத்திய கலாநிதி)
(திருநெல்வேலி)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட வினாசித்தம்பி குமாரவேலு சண்முகநாதன் 5-5-97 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஜெயபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வைத்திய கலாநிதி ஜெயக்குமாரன் மற்றும் ஜெயகௌரி (கனடா), ஜெயக்குமாரி (மன்னார்), ஜெயமோகன் (உரும்பிராய்), ஜெயரூபன் (வவுனியா), ஜெயநாதன் (கொழும்பு), ஜெயராஜ் (மல்லாவி), ஜெயந்தி (யாழ்ப்பாணம்), ஜெயபாலினி (திருநெல்வேலி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்றவர்களான வைத்திய கலாநிதி வி. கு. நடராசா, வி. கு. இராமலிங்கம் (விரிவுரையாளர்) மற்றும் நா. சிவபாக்கியம், க. பராசக்தி, வி.கு. பத்மநாதன் (வளவிலங்கு அதிகாரி) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6-5-97) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
பிள்ளைகள்

'சபாகிரி'
இல. 125, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு.

(46758)


எமது ஒறிஜினல் வெளியீடு!

மம்முட்டி நடித்த
ஹிட்லர்

ஜெயராம் நடித்த
புது நிலவு

ஜெயராம் நடித்த
புருசலட்சணம்

வீடியோ
விமல்
யாழ்ப்பாணம்.

(46757)


## உள நல சங்கம்
## விசேட பொதுக் கூட்டம்

உள நல சங்க விசேட பொதுக் கூட்டம் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் இயங்குகின்ற தெல்லிப்பளை மாவட்ட வைத்திய சாலையில் எதிர்வரும் **21 — 05 — 1997** புதன் கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற உள்ளது. சங்கத்தின் நடவடிக்கைகளை தொடர்வதற்கு சகல நிர்வாக உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள், நலன் விரும்பிகள் யாவரையும் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

எஸ். கணபதிப்பிள்ளை
உபதலைவர்.

ஏ. விசாகப்பெருமாள்
செயலாளர்.


(47215)

# ஆறாம் மாத நினைவஞ்சலியும்
# அந்தியேட்டி அழைப்பும்



செல்வன்
**சின்னத்துரை அரியதாஸ்**

மலர்வு: 08 — 12 — 1975
உதிர்வு: 21 — 12 — 1996



செல்வன்
**சிவபாலன் சுதாகரன்**
(பனம்பொருள் கூட்டுறவுச்சங்க அங்கத்தவர், சாவகச்சேரி)

மலர்வு: 09 — 04 — 1978
உதிர்வு: 21 — 12 — 1996

**திதி: 06-05-1997**

ஆறுமாதமானதோ உம் ஆவி பிரிந்துசென்று
கூறுமெம்மிதயம் வெந்தணலாய் வேகின்றதே — எமக்குத்
தேறுதல் மொழிசொல்ல வேறுயாருமில்லை! தெய்வமே
ஆறுதில்லையே பாவிமனம்! ஆத்மா சாந்தியடைவதாக!

பிரிவால் துயருறும் உள்ளங்கள்:

| | | | |
|---|---|---|---|
| ஆ. சத்தியசீலன், | ஆ. விக்கினேஸ்வரன் | சி. சகுந்தலாதேவி, | சி. சிவாகரன் |
| ஆ. மகேஸ்வரன், | ஆ. பரமானந்தம் | சி. பிரபாகரன் | சி. நதியா, |
| க. சண்முகம், | ச. இராசேஸ்வரி, | சி. நளினி, | கி. சிவராசா, |
| சு. சுந்தரலிங்கம், | | கி. கோடீஸ்வரன், | கி. நாகேஸ்வரி |
| சு. விக்கினேஸ்வரி, | சி. யோகேஸ்வரி | கி. கிருஷ்ணபவான், | |
| சி. சுபாஸ்கரன், | கி. தெய்வேந்திரம், | கி. நாகபூசணி அம்மா, | |
| தே. சித்திராமலர், | தே. கமலா, | கி. கமலராணி, | கி. செல்வராணி, |
| தே. [illegible] | தே. பிரசாந்த் | கி. வசந்தராணி. | |
| தே. தர்சனா | தே. தர்சன் | | |

மறவன்புலோ,
சாவகச்சேரி.

(சி/670)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முபுட்டு- கபீலா பேச்சு

# இணக்கமின்றி முடிவு

## மீண்டும் சந்திக்க ஏற்பாடு

கின்ஸாசா, மே 6

உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஸயர் நாட்டு அதிபர் முபுட்டுவுக்கும் கிளர்ச்சியாளர் கூட்டணித் தலைவர் கபீலாவுக்கும் இடையே நடைபெற்ற முதலாவது பேச்சு வார்த்தை இணக்கம் எதுவும் இன்றி முடிவடைந்துள்ளது.

இன்னும் 10 நாள்களுக்குள் மற்றொரு பேச்சுவார்த்தை நடைபெறும் என்று தென்னாபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலா தெரிவித்தார். (ஐ-10)

# தேர்தல் நடத்த அதிபர் சம்மதம்; அதற்கு முன் பதவி விலக மறுப்பு

கின்ஸாசா, மே 6

ஸயர்ில் கடந்த ஏழு மாதகாலமாக நீடிக்கும் உள்நாட்டுப் போருக்கு முடிவு ஒன்றைக் காண்பதற்காக அங்கு தேர்தல் நடத்துவதற்கு அதிபர் முபுட்டு சம்மதித்துள்ளார். ஆனால் தேர்தலில் வெற்றி பெறும் தலைவரிடம் அதிகாரத்தைக் கையளிக்கும் வரை தாம் பதவி விலகப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிபரின் இந்தக் கோரிக்கையை ஏற்க கிளர்ச்சியாளர் கூட்டணித் தலைவர் திட்டவட்டமாக மறுத்துவிட்டார் என தென்னாபிரிக்க மத்தியஸ்தர்கள் தெரிவித்தனர்.

அதிபர் உடனடியாகப் பதவி விலகி இடைக்கால நிர்வாகத்தை தங்களிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று கபீலா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். (ஐ-10)

# யுத்த நிறுத்தக் கோரிக்கை; கிளர்ச்சியாளர் நிராகரிப்பு!

## தலைநகரை நெருங்குகின்றனர்

கின்ஸாசா, மே 6

ஸயர் நாட்டின் தலைநகர் கின்ஸாசாவில் உள்ள விமான நிலையத்தில் இருந்து சுமார் 70 கிலோ மீற்றர் தொலைவில் கிளர்ச்சிப் படைகள் முன்னேறி நிலை கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அதிபர் முபுட்டு பதவியில் இருந்து விலகும் வரை யுத்த நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கிளர்ச்சிக் கூட்டணியின் தலைவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

தனது போராளிகள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்துவர் என்றும் —

தற்போது அவர்கள் கின்ஸாசாவை நெருங்கிக் கொண்டிருப்பதாகவும் கபீலா தெரிவித்தார்.

தென்னாபிரிக்கா மற்றும் ஐ. நா. பிரதிநிதிகளின் ஏற்பாட்டில் தென்னாபிரிக்க கடற்படைக் கப்பலில் நடந்த முதலாவது சந்திப்பில் இரு தலைவர்களுமே நெருக்கடிக்குத் தீர்வு ஒன்றைக் காணத் தவறியுள்ளதால் —

கிளர்ச்சியாளர்கள் இராணுவ ரீதியில் ஆட்சியைக் கைப்பற்றக் கூடிய நிலை உருவாகி இருப்பதாக அவதானிகள் தெரிவித்தனர். (ஐ-10)

**உலக அரங்கில்**

# தம்மீது விசாரணை நடத்துவது சட்டவிரோதம் என்கிறார் யாதவ்

## ஆளுநரின் அதிகாரத்துக்கும் சவால்

பட்னா, மே 6

இந்தியாவில் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான பீஹார் மாநில முதல்வர் லாலு பிரசாத் யாதவ் கால்நடைத் தீவன ஊழல் தொடர்பாக தம்மீது விசாரணை நடத்துவது சட்ட விரோதமானது என எச்சரிக்கை செய்துள்ளார்.

முதலமைச்சர் ஒருவருக்கு எதிராக விசாரணை நடத்த அனுமதி வழங்குவதற்கு மாநில ஆளுநருக்கு அதிகாரம் கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழக முதல்வராக ஜெயலலிதா இருந்தபோது ஊழல் தொடர்பாக விசாரிக்க மாநில ஆளுநரான சென்னா ரெட்டி வழங்கிய உத்தரவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்ததை 49 வயதான யாதவ் சுட்டிக் காட்டினார்.

இந்தியாவில் மத்தியில் ஆட்சி செய்யும் 13 கட்சி ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் முக்கிய கட்சியான ஜனதா தளத்தின் தலைவராக லாலு பிரசாத் யாதவ் இருந்து வருகிறார்.

அவர் பதவி துறக்க வேண்டும் என கர்நாடக மாநில முதல்வர் பட்டேல் உட்பட பல ஜனாதா தளத் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜனதா தளத்தின் புதிய தலைவராக ஐ. கே. குஜ்ராலை நியமிப்பது தொடர்பாக அக்கட்சியின் மத்திய குழு ஆராய்ந்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-10)

# பாகிஸ்தானின் பாதுகாப்புசெலவை குறைக்குமாறு ஆலோசனை

இஸ்லாமாபாத், மே 6

பாகிஸ்தான் தனது பாதுகாப்புத்துறைச் செலவுகளைக் குறைக்க வேண்டும் என சர்வதேச நிதி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வாஷிங்டனில் சென்ற வாரம் நடைபெற்ற கூட்டத்தில் சர்வதேச நிதிநிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பாகிஸ்தான் நிதி அமைச்சர் சர்தாஸ் அஸீசை சந்தித்த போது இந்த அறிவுரையை வழங்கினார் என பாகிஸ்தான் செய்தி ஏடு ஒன்று தெரிவிக்கிறது.

இதற்கிடையில் பாகிஸ்தானில் ஷியா முஸ்லிம்களுக்கும் சுனி முஸ்லிம்களுக்கும் இடையே இடம்பெற்றுவரும் மோதல்கள் பெரியதொரு பாதுகாப்பு அச்சுறுத்தலாக உருவெடுத்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## ஆப்கன் நெருக்கடிக்கு தீர்வு முயற்சி

ஆப்கனில் மோதிக் கொண்டிருக்கும் குழுக்களை ஒன்று திரட்டி நாட்டில் நிலவிவரும் நெருக்கடியைத் தீர்ப்பது குறித்து கலந்தாலோசனை செய்யப்போவதாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஹோபார் அயூப்கான் தெரிவித்துள்ளார்.

ஆப்கனின் எல்லைகளில் அமைந்துள்ள நாடுகளும் இந்தக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

# தாயகம் திரும்ப முண்டியடித்த

# 150 ஹூட்டு அகதிகள் நெரிசலில் சிக்கிப் பலி!

கிசங்கானி, மே 6

கிழக்கு ஸயரில் ரயில் ஒன்றில் ஏற்பட்ட பெரும் நெரிசலில் சிக்கி சுமார் 150 றுவாண்டா ஹூட்டு இன அகதிகள் பலியாகினர்.

றுவாண்டாவிற்குத் திருப்பி அனுப்புவதற்காக இவர்கள் ரயில் மூலம் கிசங்கானி நகருக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது இச்சம்பவம் இடம்பெற்றது.

கிழக்கு ஸயரில் நிர்க்கதியாக விடப்பட்டுள்ள இந்த றுவாண்டா நாட்டு ஹூட்டு இன அகதிகளை தாயகம் திருப்பி அனுப்புவதில் ஐ. நா அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

உள்ளூர்க் கிராமவாசிகளினதும் கிளர்ச்சியாளர்களினதும் தாக்குதல்களுக்கு அஞ்சி சுமார் 80 ஆயிரம் ஹூட்டு அகதிகள் அண்மையில் தங்கள் முகாம்களை விட்டுக் காடுகளுக்குள் தப்பி ஓடியிருந்தனர்.

தற்போது காடுகளில் இருந்து திரும்பி வரும் இந்த அகதிகளைத் தாயகத்துக்கு விமானம் மூலம் அனுப்புவதற்காக அவர்களை ரயில் மூலம் கிசங்கானி நகருக்கு அழைத்துச் செல்லும் நடவடிக்கையில் ஐ. நா. அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

காடுகளில் உள்ள மறைவிடங்களில் இருந்து எப்படியாவது உயிர்பிழைத்து தாயகம் திரும்பிவிட அகதிகள் முண்டியடித்து வருவதால் ரயிலில் பெரும் சன நெரிசல் ஏற்பட்டிருக்கிறது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-10)

புதுடில்லிக்கு அருகே

# குண்டு வெடிப்பு தவிர்க்கப்பட்டது

புதுடில்லி, மே 6

இந்தியாவில் புதுடில்லி அருகே அனல்மின் நிலையத்துக்கு சமீபமாக கடந்த ஞாயிறன்று நிகழவிருந்த பெரியதொரு குண்டு வெடிப்பு தொழிற் பாதுகாப்புப் படையின் காவலர் ஒருவரின் முயற்சியால் தவிர்க்கப்பட்டது.

அனல் மின்சார நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்ட நிலக்கரி இறக்கப்பட்டுக் கொண்டிருந்த போது அதில் ஐந்து பெட்டிகளில் வெடிப் பொருள்கள் இருந்ததைக் காவலர் கண்டுபிடித்து உடனே டில்லிப் பொலீசுக்கும் இராணுவத்திற்கும் தகவல் கொடுத்தார்.

அந்த வெடிப் பொருள்கள் மேற்கு வங்காளத்திலிருந்து ராஜஸ்தானுக்கு கொண்டு செல்லப்பட்டபோது திருடப்பட்டவை என இராணுவ அதிகாரிகள் அடையாளம் கண்டனர். (இ-10)

# றொனி பிளயர் - கிளின்ரன் நெதர்லாந்தில் சந்திப்பர்

பிரிட்டனின் புதிய பிரதமர் றொனி பிளயர் இம்மாதக் கடைசியில் அமெரிக்க அதிபர் பில்கிளின்ரனை சந்திக்கவுள்ளார்.

நெதர்லாந்தில் நடைபெறவுள்ள ஒரு சர்வதேச மாநாட்டின்போது இந்த சந்திப்பு இடம் பெறும்.

நெதர்லாந்துச் சந்திப்பை அடுத்து அதிபர் கிளின்ரன் லண்டன் சென்று றொனி பிளயரை சந்திப்பார் என ''சன்'' பத்திரிகை தெரிவித்துள்ள போதிலும் இத்தகவலை எவரும் இன்னும் உறுதிப்படுத்தவில்லை. (இ-10)

# நியாய விலைக் கடையில் குறைந்த விலையில் அரிசி

## கருணாநிதி அறிவிப்பு

தமிழ் நாட்டில் உள்ள நியாய விலைக் கடையில் ஜூன் 1 ஆம் திகதி தொடக்கம் அரிசி மானிய விலையில் வழங்கப்படும் என்று தமிழ் நாடு முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்று சென்னையில் தெரிவித்தார்.

இதற்காக வருடம் ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்படும் என்றும்-

மாதம் 25 மெற்றிக் தொன் அரிசி மத்திய அரசிடம் இருந்து பெறப்படும் என்றும் அவர் கூறினார். (இ)

# 'அக்னி' ஏவுகணைத் திட்டத்தை தொடருமாறு கோரிக்கை

இந்தியாவின் சர்ச்சைக்குரிய 'அக்னி' ஏவுகணைத் திட்டத்தை தொடர்ந்து செயற்படுத்துமாறு இந்திய நாடாளுமன்றத்தின் 42 உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் பாதுகாப்புக்கு இது அவசியமானது என்று இக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

எதிரி நாடு ஒன்றினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை எதிர்த்துச் சமாளிப்பதற்கு இந்தியா தனது ஏவுகணைத் திறன்களை விருத்தி செய்வது அவசியம் என்று இந்தக்குழு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'அக்னி' ஏவுகணைத் திட்டம் அமெரிக்காவின் எதிர்ப்புக்கு உள்ளாகி இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## நாடு திரும்பினார்

தீவிரவாதக் குழுவான இஸ்லாமிய ஹமாஸ் இயக்கத் தலைவர் மௌஸா அபூமர்சூக் இரண்டு வருடங்களின் பின்னர் நாடு திரும்பினார்.

இவர் நாடு திரும்புவதற்கான அனுமதியை ஜோர்தான் மன்னர் ஹுசேய்ன் வழங்கி உள்ளார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஜோர்தானில் இருந்து நாடு கடத்தப்பட்ட அபூமர்சூக் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டு விசாரணை எதுவும் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருந்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலை வேலை நிறுத்தம்: பாதிக்கப்படுவது மாணவர்களே!

## மாணவர் ஒன்றியம் துண்டுப் பிரசுரம்

யாழ்ப்பாணம், மே 6

யாழ். பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்கள் தொடர்ச்சியாக நடத்தும் வேலை நிறுத்தத்தினால் முற்று முழுதாகப் பாதிக்கப்படுவது யாழ். பல்கலைக் கழக மாணவர்களே. இத்தகைய தொடர்ச்சியான போராட்டம் யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலைக்கு ஏற்றது அல்ல.

இவ்வாறு ''பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்'' என்ற பெயரில் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;-

கடந்த 25-04-1997 இல் இருந்துயாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவருவது அனைவரும் அறிந்ததே.

இவர்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்து அரசுக்கு எதிராகப் போராடுகின்ற போதிலும், முற்று முழுதாக பாதிப்பை எதிர்கொள்வது பல வழிகளிலும் நொந்து போயுள்ள யாழ். பல்கலைக் கழக மாணவர்களே. கல்விசாரா ஊழியர்களின் இச் செயல் ''வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது'' போன்றதாகும்.

பல்கலைக்கழக மாணவர்கள் தமது கற்கைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட காலத்தை விட மிக அதிகளவு காலத்தை பல்கலைக்கழக கல்விக்காக செலவிடுகிறார்கள்.

இம் மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பின்பு பல்கலைக்கழகத்தினுள்புகுவதற்கு சுமார் இரண்டரை வருடங்களாகக் காத்திருக்கிறார்கள். இதற்கு மேலதிகமாக இம் மாணவர்கள் கடந்த காலங்களில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக சுமார் ஒன்றரை வருடத்தை வீணே இழந்துள்ளார்கள்.

இவ்வாறு மாணவர் தமது காலத்தை வீணாக இழந்து கொண்டிருக்க, பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்கள் இலங்கையின் ஏனைய பல்கலைக்கழகங்களில் நிகழ்வது போன்று தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இந் நடவடிக்கையானது ஏனைய பல்கலைக் கழகங்களைப் பாதிப்பதை விட முற்றிலும் சீர்குலைந்து பின் புனர்நிர்மாணம் பெற்று வருகின்ற யாழ். பல்கலைககழகத்திற்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

இது தவிர எமது பல்கலைக்கழகத்தில் கணிசமான அளவு மாணவர்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் தமது பெற்றோரைப் பிரிந்து தனித்திருந்து கல்வி கற்பது மட்டுமன்றி தமது கற்றல் நடவடிக்கைகளுக்கான பொருளாதார உதவிக்கு முற்றிலும் பெற்றோரையும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் உதவிப் பணத்தையும் மட்டுமே எதிர்பார்த்திருக்கிறாகள்.

கல்விசாரா ஊழியர்களின் இவ் வேலை நிறுத்தத்தால் மாணவர் உதவிப்பணம் போன்ற பண உதவிகளை மாணவர்கள் பெற முடியாதுள்ளது. இதனால் இவர்கள் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்குகின்றார்கள். எனவே இவ் வேலை நிறுத்தம் முழு அளவில் நீடிக்குமானால் இம் மாணவர்கள் தமது பிரதேசங்களுக்கு திரும்பிச் செல்ல நிர்ப்பந்திக்கப்படுவார்கள். இவ்வாறான நிலை ஏற்பட்டால் பின்னர் இம்மாணவர்கள் பல்வேறு பிரயாண நெருக்கடிகளுக்கூடாக மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பி வர மிக நீண்டகாலம் எடுக்கும். இதனால் மேலும் அதிக கால விரயம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

ஆகவே மாணவர்களாகிய எமது பிரச்சினைகளையும் கருத்திற்கொண்டு மேற்படி பிரச்சினையை மனிதாபிமான ரீதியாக அணுகி, தங்கள் சமாசத்திற்கு மாணவர்களின் பிரச்சினைகளையும் யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலையையும் விளக்குவதுடன் கடந்த காலங்களில் பல்வேறு நெருக்கடியின்மத்தியிலும் யாழ். பல்கலைக்கழகம் இயங்கியது போன்று இம் முறையும் இப்பல்கலைக்கழகம் மூடப்படாமல், பரீட்சைகள் தடைப்படாமல், ஓரளவாவது சுமுகமாக இயங்குவதற்கு இவர்கள் ஒத்துழைப்பு நல்குவார்கள் என நம்புகிறோம்.

மாணவர்களுக்கு உதவி செய்யும் நோக்குடன் குடிதண்ணீர், மின்சார வசதி போன்றவற்றை ஏற்படுத்தித் தருவது வரவேற்கத்தக்கதாயினும் மாணவர்களின் நிலை மேலும் மோசமடைவதைத் தடுப்பதற்கு இவை போதியவையன்று.

இவர்களின் கோரிக்கைகளுக்கு நாம் எவ்வகையிலும் எதிரானவர்களல்லர். ஆயினும் இவர்களின் தொடர்ச்சியான போராட்டம் யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலைக்கு எவ்விதத்திலும் ஒவ்வாதது.

எனவே இவர்கள் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை குறிப்பாகப் பரீட்சைகளைப் பாதிக்காத வகையில் தமது போராட்டத்தினை மேற்கொள்வதே பொருத்தமானதாகும்; ஆகவே இன்றைய காலத்துக்கும், சூழலுக்கும், தேவைக்கும் ஏற்றவகையில் தமது தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார்கள் என நம்புகிறோம்.

இப்படி செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தாமதித்து வந்த பரீட்சார்த்திகள்

சாவகச்சேரி, மே 6

யாழ்ப்பாணத்தில் கடந்த சனியன்று நடைபெற்ற சமய ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றிய பரீட்சார்த்திகள் பலர் குறிப்பிட்ட நேரத்துக்கு பிந்தியே வர நேர்ந்தது.

போக்குவரத்து தடங்கல்களால் இவ்வாறான கஷ்ட நிலை ஏற்பட்டது.

தென்மராட்சியில் இருந்து பரீட்சைக்கு வந்தவர்கள் சிலர் பரீட்சை நிலையங்கள் தெரியாது அவதிப்பட்டனர்.

சில இடங்களில் பரீட்சை நிலைய சுட்டெண்களும் மாறி வந்திருந்தன எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் சில பரீட்சை நிலையங்களில் பரீட்சை தாமதமாகவே தொடங்கியது.

சில பரீட்சார்த்திகள் பரீட்சை அட்டவணையில் குறிப்பிடப்பட்ட 9.30 மணியைபழையநேரம் எனக் கருதிபரீட்சைக்கு பிந்தியே வந்திருந்தனர். (இ-31)

## பொது அறிவு போட்டிப்பரீட்சை

வலிகாமம் தெற்கு, மே 6

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், கல்வி உயர் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் பொது அறிவுப் போட்டி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

மாகாண மட்டத்திலான போட்டியில் பங்குகொள்ளும் பாடசாலைகள் பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவுசெய்யப்பட உள்ளன.

பாடசாலையை தெரிவு செய்வதற்காக நடத்தப்படும் பரீட்சைக்கு ஒரு பாடசாலையிலிருந்து ஐந்து மாணவர்கள் பங்குபற்ற முடியும்.

இப் போட்டிப்பரீட்சைகள் இம் மாதம் மூன்றாம் வாரத்தில் நடத்தப்படும் என வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சைச் சேர்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. திலகரத்தினம் அறிவித்துள்ளர். (இ-152)

## பிரதேச சபைக்கு ரூபா $2\frac{1}{2}$ லட்சம் இழப்பு

கடந்த வருடம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் முகமாலை, முள்ளிப்பற்று, புலோப்பளை உப அலுவலகங்களில் ரூ. 2 லட்சத்து 65 ஆயிரத்து 600 பெறுமதியான அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், மின்சாரப்பொருள்கள், நூல்நிலையப் புத்தகங்கள் ஆகியவற்றுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக பிரதேச சபை செயலாளர் கு. ந. பாலச்சந்திரன் தெரிவித்தார்.

### சாவகச்சேரி பிரதேச சபை:

## ரூ. 25 லட்சம் செலவில் அபிவிருத்தித் திட்டங்கள்

சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட கைதடி நாவற்குழி, வரணி, கச்சாய், மிருசுவில், சரசாலை ஆகிய உப அலுவலக பகுதிகளில் சுமார்25 லட்சம் ரூபாசெலவில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இதற்காக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஏனைய தொண்டர் நிறுவனங்கள், மத்திய அரசாங்கம் ஆகியவற்றிடம் நிதி உதவி கோரியுள்ளதாக பிரதேச சபையின் விசேட ஆணையாளர் பு.சுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

இந்த நிறுவனங்களின் உதவியுடன் இப் பிரதேசத்தில் 8 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாவுக்கு அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார்.

பிரதேச சபைக்கு நிலுவையாக உள்ள 13 இலட்சத்து 16 ஆயிரத்து 481 ரூபா வரியிறுப்பாளர்களால் செலுத்தப்படும் பட்சத்தில் மேலும் பல அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-117)

## கமநல சேவை நிலையங்களில் சிறு தானிய மரக்கறி விதைகள்

தொல்புரம் கமநலச் சேவை நிலையம், உடுவில் கமநலச் சேவை நிலையம் மற்றும் தற்போது சண்டிலிப்பாய் தொட்டிலடி என்ற இடத்தில் இயங்கிவரும் கீரிமலை கமநலச்சேவை நிலையம் ஆகியவற்றில் எள்ளு, பயறு, உழுந்து, கௌபி, குரக்கன் ஆகிய சிறுதானியங்களின் விதைகள் கையிருப்பில் இருப்பதாகவும்—

இப்பகுதிகளிலுள்ள விவசாயிகள் சிறுதானிய செய்கைக்கு இவற்றை பெற்றுக் கொள்ள முடியும் என்றும்— தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை மேற்படி நிலையங்களில் உள்நாட்டு, வெளிநாட்டு மரக்கறி விதைகளும் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக கொண்டு வரப்பட்டுள்ளன.

இவற்றை சகாய விலைகளில் பெற்றுப் பயனடையுமாறு மேற்படி மூன்று கமநலச் சேவை [illegible] தும் பெரும்[illegible] கத்தர் பொ. குகநாதன் தெரிவித்தார். (இ-135)

## கண்டெடுத்த அ. அட்டைகள்

யாழ்ப்பாணம், மே 6

தவறவிடப்பட்ட தேசிய மற்றும் விசேட அடையாள அட்டைகள் யாழ். செயலக நலன்புரிக் கிளையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் யாழ். செயலக பொதுசன தொடர்பு உத்தியோகத்தரிடம் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டெடுக்கப்பட்டுள்ள அடையாள அட்டைகள் பற்றிய விவரம் வருமாறு:

★ மார்சலின் பிரான்சிஸ் சேவியர் — புங்குடுதீவு.

★ யோசெப் சின்னத்துரை பிரான்சிஸ் — யாழ்ப்பாணம்.

★ புவனேஸ்வரி சிவஞானகுரு — புன்னாலைக்கட்டுவன் வடக்கு.

★ செல்லையா மரியதாஸ் மைடா — சாவற்கட்டு, மன்னார் மேற்கு.

★ பாலுபாக்கியம் — உடுவில்.

★ வேலன் இராசலிங்கம் — கிளிநொச்சி.

★ தையலம்மா சின்னத்துரை — சங்குவேலி.

★ செல்வன் சிவலிங்கம் — சுழிபுரம்.

★ இராசேஸ்வரி முருகேசு — காரைநகர் கிழக்கு.

★ வர்ணலட்சுமி நடராசா — தெஹிவளை.

★ பொன்னம்பலம் பவானந்தன் — யாழ்ப்பாணம்.

★ இராசலிங்கம் சிவகுமார் — புங்குடுதீவு.

★ பற்றிமா அந்தோனிப்பிள்ளை — பெரியவிளான்.

★ செல்லையா கணேஸ்வரன் — தாமரைக்குளம், நெடுங்கண்டல்.

★ [illegible] — [illegible].

★ மதியாபரணம் மதிரூபன் — கொக்குவில்.

★ சபாபதி உதயகரன் — காங்கேசன்துறை.

★ முருகேசு ஜெயபாலன்— யாழ்ப்பாணம்.

★ செல்வராணி ஆறுமுகம் — சரவணை.

★ கணபதிப்பிள்ளை யோகநாதன் — வவுனியா.

★ சிவபாக்கியம் செல்வராசா — சுன்னாகம் தெற்கு.

★ செல்லத்துரை ஜெயராசா — கிடைப்பிட்டி

★ பாறுப்பிள்ளை அப்பன் — தெல்லிப்பழை தென்மேற்கு

★ அன்னலட்சுமி முத்துத்தம்பி — ஹம்டன் ஒழுங்கை, வெள்ளவத்தை

★ யாக்கோபு சந்திரவதனி — வயாவிளான்

★ சின்னத்தங்கம் கந்தையா — கொல்லங்கலட்டி

★ நாகலிங்கம் ஜெகசோதி — சுன்னாகம்

★ துரைராசா முருகதாஸ் — வேலணை கிழக்கு

★ மனோன்மணி இரத்தினம் — திருகோணமலை

★ மயில்வாகனம் துரைச்சாமி — மயிலிட்டி வடக்கு

★ அமராவதி தம்பன் — சண்டிலிப்பாய்

★ அருணாசலம் கமலாதேவி— நல்லூர்

★ சுப்பிரமணியம் கணேசன்—அரியாலை

★ ஜெயராசா பரமேஸ்வரி — திருகோணமலை

★ மாணிக்கராசா செல்வசோதி — புலோலி கிழக்கு

★ கண்மணி நடராசா — யாழ்ப்பாணம்

★ தனலட்சுமி சுந்தரலிங்கம் — ஆனைக்கோட்டை

★ பிலுப்பையா நக்கிலஸ் மரியதாஸ் நீக்கெலா மறினா — கிளாலி

★ ஜோன் சின்னராசா மத்வேசு — உயரப்புலம்

★ வள்ளியாச்சி வயிரமுத்து —தொல்புரம்

★ கதிர்காமு சிதராசா — யாழ்ப்பாணம்

★ வயித்திலிங்கம் சீனிவாசகம் — வட்டுக்கோட்டை

★ பூலோகசிங்கம் ஸ்ரீபன் மேரி அலோசியஸ் பூலோகராசா - வண்ணார்பண்ணை.

★ பத்மநாதன் ஜெகநாதன் — யாழ்ப்பாணம்.

★ கணேசலிங்கம் புஷ்பலதா - நாவற்குழி.

★ துரைராசா சிவலிங்கம் — கொழும்புத்துறை.

ஞானதேவி சதாசிவம் — வேலணை கிழக்கு.

★ சிதம்பரப்பிள்ளை சேனாதிராசா — தெல்லிப்பழை கிழக்கு.

★ மார்க்கண்டு செல்வராணி — கீரிமலை.

★ பத்மநாதபிள்ளை — கொழும்பு.

★ திருச்செல்வம் செல்வகுமார் — கொழும்பு.

★ கந்தையா பொன்னுத்துரை — மாகியப்பிட்டி.

★. கனகலிங்கம் சுலோசனா— ஆண்டான்குளம்.

★ குணராஜா யோகேஸ்வரி — நல்லூர்.

★ திலகவதி கனகசுந்தரம் — வட்டு. மேற்கு.

★ மரியரெட்ணம் தியோகு — குருநகர்.

★ சின்னத்துரை ரவீந்திரன் — மூளாய்.

★ தருமராசா தயாநிதி — புளியங்கூடல் வடக்கு.

★ தம்பர் அழகரத்தினம்— பலாலி.

★ சந்தானலட்சுமி கணேசன் — திருநெல்வேலி.

★ அருளம்பலம் தவநாயகம் — மாவிட்டபுரம்.

★ வரதராசன் மரியரெட்ணம் — யாழ்ப்பாணம்.

★ கலாதேவி வர்ணகுலசிங்கம் — கீரிமலை.

(இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரிலுள்ள சில காவலரண்களில் இராணுவத்தினர் திடீரென வாபஸ்

## வன்னிக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கலாம்

யாழ்ப்பாணம், மே 6

யாழ். நகரப் பகுதியில் உள்ள சில காவலரண்கள் நேற்று படையினர் இன்றி வெறிச் சோடிக் காணப் பட்டன.

இந்த காவலரண்களில் இருந்து படையினர் திடீரென வாபஸ் பெறப்பட்டுள்ளனர்.

வன்னியில் புலிகளுக்கு எதிரான பெரும் தாக்குதல் ஒன்றை ஆரம்பிப்பதற்கு படையினர் முஸ்தீபு செய்து வருவதால் இவர்கள் பெரும்பாலும் வன்னிப் பகுதிக்கே அனுப்பப்பட்டிருக்கலாம் என்று ஊகம் தெரிவிக்கப் படுகிறது.

ஏற்கனவே தெற்கில் இருந்து படையினர் பெருமளவு வவுனியாவுக்கு நகர்த் பட்டுள்ளனர்.

வடக்கில் இருந்தும் படையினர் செல்வதால் படையினரின் அடுத்த நடவடிக்கை எந்நேரமும் வன்னியில் ஆரம்பிக்கப்படலாம் என்றும் —

ஓமந்தையில் இருந்து கிளிநொச்சி வரையான பிரதான பாதையைக் கைப்பற்றுவதே படையினரின் நோக்கமாக இருக்கலாம் என்றும் நம்பப் படுகிறது.

மன்னாருக்கான தரை வழிப்பாதையை திறப்பதற்கான இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகி இருந்த சமயமும், யாழ்ப்பாணத்தில் உள்ள சில காவலரண்களில் இருந்து படையினர் வாபஸானது தெரிந்ததே. (இ)

# தனியார் மருந்தகங்களில் முட்டை விற்பதற்குத் தடை

## நோய் பரவும் என எச்சரிக்கை

திருநெல்வேலி, மே 6

தனியார் மருந்தகங்களில் முட்டை விற்கப்படுவது சுகாதார விதிகளுக்கு முரணானது என்று சுகாதாரப் பகுதியினர் எச்சரிக்கை செய்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் சில மருந்தகங்களில் முட்டை விற்பனையும் நடைபெறுவதாக தெரியவந்ததை அடுத்து மேற்கண்ட எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் ரி. மாகதேவன் இதுபற்றி கருத்து தெரிவிக்கையில் முட்டையின் வெளிப்புறத்தில் கண்ணுக்கு தெரியாத கிருமிகள் இருக்கின்றன. தொற்று நோய் பரப்பும் இக்கிருமிகளால் ''சல்மநெல்லா'' (Salmanella) என்ற நோய் ஏற்படுமென கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆகவே தனியார் மருந்தகங்களில் முட்டை விற்பனை செய்யப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (இ-135)

## மாணவருக்கு பாடசாலை உபகரணங்கள்

வன்னியில் இருந்து திரும்பி வந்து யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்று வரும் 9 பாடசாலைகளைச் சேர்ந்த 100 வறிய மாணவர்களுக்கு யாழ். கத்தோலிக்க இலக்கிய பாடசாலை உபகரணங்களை வழங்கியது.

யாழ். மறைக்கல்வி நடு நிலையத்தில் நடைபெற்ற அருட்திரு. ஹில்லறி ஜெபநேசன் அடிகளாரின் நினைவு அஞ்சலி நிகழ்வில் இவை வழங்கப்பட்டன. (இ-51)


## ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்

### 5 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்-1997

மேற்படி சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் வைகாசி மாதம் 21 ஆம் திகதி புதன் கிழமை (21-05-1997) காலை 10 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறும்; அங்கத்தவர்கள் யாவரும் தவறாது சமுகம் தருமாறு வேண்டிக் கொள்கிறோம்.

அன்றைய தினமே சந்தாப்பண நிலுவையிருப்பின் கட்டி உறுதிபரிமையை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

ச. த. கணநாதன்
கௌரவ செயலாளர்

15, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (46755)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 23 — 03 — 1906

மறைவு: 06 — 05 — 1996

### அமரர் தில்லைநாதர் சுப்பிரமணியம்

(விவாக, பிறப்பு, இறப்பு பதிவுகாரர், புத்தூர்.)

திதி: 26 - 04 - 1997

தங்கள் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்:

- குடும்பத்தினர்

சுன்னாகம் வீதி,
புத்தூர். (4675[illegible])


# மோசமாக பழுதடைந்துள்ள ஹென்ஸ்மன் வீதி

தென்மராட்சி மே 6

சாவகச்சேரி டச்சு வீதியையும் பருத்தித்துறை வீதியையும்இணைக்கும் ஹென்ஸ்மன் வீதி மிகவும் மோசமாகபழுதடைந்துள்ளதால் இந்த வீதியைப் பயன்படுத்துவோர் பெரிதும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்

சாவகச்சேரி பெற்றோல் நிலைய சந்தியிலிருந்து தபால் அலுவலகம் வரை போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளதால் சாவகச்சேரி பருத்தித்துறை வீதியில் பயணம் செய்யும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள், மாணவர்கள், அரச ஊழியர்கள் ஹென்ஸ்மன் வீதியூடாகவே தமது பயணத்தை மேற்கொள்கின்றனர்.

சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகம், தபால் அலுவலகம், இலங்கை மின்சாரசபை, சாவகச்சேரி மகளிர்கல்லூரி ஆகியவற்றுக்கு இந்த வீதி ஊடாகவே செல்ல வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

# தேங்காய் விலை அதிகரிப்பு

பருத்தித்துறை, மே 6

வடமராட்சிப் பகுதியில் தேங்காயின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

5 ரூபா, 6 ரூபாவுக்கு விற்கப்பட்ட தேங்காய் தற்போது 8 ரூபா முதல் 10 ரூபா வரை விற்கப்படுகிறது.

சைக்கிளில் தேங்காய் எடுத்து வருபவர்கள் சோதனை நிலையங்களின் இடம் பெறும் கெடுபிடிகளால் தேங்காய் எடுத்து வர தயங்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-118)

# சைவநெறி தேர்வுப்பரீட்சை

திருநெல்வேலி, மே 6

யாழ். சைவபரிபாலன சபை ஆண்டு 13 மாணவர்களின் நலன் கருதி, கல்வித் திணைக்களத்தின் அனுமதியுடன் எதிர் வரும் ஜூன் மாதத்தில் ஆண்டு 13 மாணவர்களுக்கான சைவநெறி தேர்வுப் பரீட்சையை நடத்த உள்ளது.

இது பற்றிய சுற்றறிக்கை சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாக பரீட்சை செயலாளர் சைவப் புலவர் வ. கந்தசாமி தெரிவித்தார்.

இப் பரீட்சையில் மாவட்ட அடிப்படையில் அதிக புள்ளிகளை பெறும் மாணவர்களுக்கு முதலாம் பரிசாக தங்கப்பதக்கமும், இரண்டாவது பரிசாக வெள்ளிப் பதக்கமும், மூன்றாம் பரிசாக வெண்கலப்பதக்கமும் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-[illegible])

# அனலைதீவு ஆஸ்பத்திரியில் வைத்தியர் எவரும் இல்லை

## நோயாளர் ஊர்காவற்றுறை வருகை

அனலைதீவு வைத்தியசாலையில் டாக்டர் எவரும் இல்லை.

இதனால் நோயாளர்கள் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு பல சிரமங்களின் மத்தியில் சென்று வருகின்றனர்.

இந்த ஆஸ்பத்திரியில் டாக்டர் இல்லாத காலத்தில் பொறுப்பாகச் செயற்பட்ட மருத்துவ மாதுவும் அண்மையில் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார்

இந்த டாக்டரும் மருத்துவ மாதுவும் எழுவைதீவு கிராமிய ஆஸ்பத்திரிக்கும் சென்று சிகிச்சை அளித்து வந்தனர்.

தற்போது அனலைதீவு மக்கள் மட்டுமன்றி எழுவைதீவு மக்களும் சிகிச்சை பெற ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு படகு மூலம் பயணம் மேற்கொள்ள வேண்டி உள்ளது. (இ117)

# வெளிமாவட்டத்துக்கு அவசரமாக செல்வோர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், மே 6

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு அவசர தேவையின் பொருட்டு செல்பவர்கள் தமது முன்னுரிமை தேவைப்படுவதை நிரூபிக்கும் ஆவணங்களை இரு பிரதிகளில் சமர்ப்பிக்க வேண்டும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

மரணம், நேர்முகப்பரீட்சை, வெளிநாட்டுப் பயணம், பருத்துவம் மற்றும் அவசர தேவைகளுக்கு செல்ல வேண்டியவர்கள் அது தொடர்பான ஆவணங்களை இரு பிரதிகளில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் — பிரிகேட்டுக்களிலோ, செயலகத்திலோ முன்னுரிமைக் கடிதம் பெறுபவர்களும் அவற்றின் இருபிரதிகள் சமர்பிக்க வேண்டும் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

# மருந்துக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மே 6

மடுவில் மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

அங்கு பனடோல் ஒன்று 10 ரூபாவுக்கு விற்பனையாவதாக தெரிவிக்கப்பட்டது. (இ-51)

# எதிர்ப்பின் நோக்கம் என்ன?

வாசகர் திருமுகம்

அதிபர் சேவையில் உள்ளவர்களை நிர்வாகப் பதவிகளில் ஈடுபடுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசாங்க லிகிதர் சேவைச்சங்க யாழ். கிளைச் செயலாளர் இ. தவராசா அறிக்கை ஒன்றை விடுத்திருந்தார். அந்த அறிக்கை 23-04-97 உதயனில் வெளியாகி இருந்தது.

அவ்வறிக்கையைப் பார்த்து சிரிப்பதா, அழுவதா என்ற நிலைப்பாடு.

அதிபர் என்பவன் ஒரு முகாமையாளனே. அதாவது நிர்வாகியே. இப்படியான நிர்வாகி கோட்டக்கல்வி அலுவலகங்களில் நிர்வாகம் செலுத்துவதால் ஏற்படும் தாக்கம் என்னவோ?

அதிபர்களை கோட்டக் கல்வி நிலையங்களில் பணிப்பாளர்களாக நியமிப்பது ஒரு புதிய விடயமல்ல. இது ஏறக்குறைய ஐந்து வருடங்களுக்கு முன்பிருந்தே நடைமுறையில் இருக்கிறது. அப்படியிருக்கும் போது தற்பொழுது இதுகுறித்து எதிர்ப்புத் தெரிவித்ததன் அர்த்தம் என்ன? நோக்கம் என்ன?

யாழ்ப்பாண மாவட்டம் கல்வியில் மார்தட்டி நின்றது ஒரு காலத்தில். இப்பொழுதோ கல்வியில் அதாள பாதாளத்தில் விழுந்து கிடக்கிறது. இதனைச் சீர்செய்வதற்கு எடுக்கப்பட்ட நடைமுறைகளில் இதுவும் ஒன்றே தவிர வேறு அல்ல.

எனவே இது குறித்துக் குழப்பம் காய்ச்சாமல் தமிழர்களின் அரும்பெரும் முதிசமாகிய கல்விக்கு இடையூறு விளைவிக்காது, வடக்கு — கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சின் செயற்பாட்டினை தமிழ் சமூகத்தினர் அனைவரும் வரவேற்போமாக.

ஆனந்த வேந்தன்

கோண்டாவில்.

# பால் மிஞ்சக் காரணம்

உதயன் 30-4-97 ஆம் திகதிய இதழில் பெரும் அளவிலான பால், தயிர் என்பன பழுதடைந்து ஊற்றப்படுகின்றன என்று யாழ். மாவட்ட கூட்டுறவுச்சங்க முகாமையாளர் வெளியிட்ட தகவல் பெரும் ஆச்சரியத்தை உண்டு பண்ணியுள்ளது அத்துடன் சங்க முகாமையாளர் தெரிவித்த கருத்துக்கள் ஏற்கமுடியாதவைகளாகும். இதற்கான காரணங்களை ஆராயும் பொழுது மேற்படி சங்கத்தின்திட்டமற்ற செயற்பாடுகள் தான் காரணமாகும் என்று கொள்ள வேண்டி உள்ளது.

கருவிகளை யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வருவதில் அனுமதியில்லை என்ற 1996 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட விடயத்தை மீண்டும் மீண்டும் கூறிக்காலத்தை விரயம் செய்வதிலும் பார்க்க, எந்தளவுக்கு முயற்சிக்கப்பட்டுள்ளது என்பதே கேள்வி.

பால் விற்பனையாகாமல் மிஞ்சுவதற்குப் பின் வரும் காரணங்களும் உண்டு என்று எண்ணுகிறேன்.

★வீட்டுக்கு வீடு கால் நடைகள் வளர்க்கும், பால்மலிந்த கொடிகாமம், சாவகச்சேரி ப்பகுதிகளில்ஏன்தான் பால்விற்கும் கிளைகள் திறக்கப்பட்டனவோ தெரியவில்லை.

★மக்கள் செறிவு கூடிய பாசையூர், கொழும்புத்துறை, நாவாந்துறை, குருநகர் பகுதிகளில் கிளைகள் திறக்கப்படுமானால் பாலின் கொள்வனவு அதிகரிக்கும். பால்மிஞ்சாது; கொள்வனவை மட்டுப்படுத்தபட வேண்டியதில்லை சங்கமும் லாபத்தில் இயங்க முடியும்.

★ சங்கக்கிளைகளின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. கிளைகளில் பால் வாங்கி அருந்துவோர் வீதி ஓரமாக நின்று அருந்துவதைக் காண முடிகிறது.

எஸ். ஆனந்தம்

இருபாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

C. 50 Lancer Model மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. அண்மையில் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வாகனம், தொடர்பு: முகாமையாளர், தேநீர்ச் சாலை, பலாலி ஆசிரியர் கலாசாலை, திருநெல்வேலி. [47210]

**தவறிவிட்டது**

பூபாலசிங்கம் இந்துமதி ஆகிய எனது 545043700V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் திருநெல்வேலி சிவன் கோயிலுக்கும், கந்தர்மடத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கோபிகா ஆடையகம் யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். (46752)

சண்முகரட்ணம் விசயராணி ஆகிய எனது 588041115 X இலக்க தேசிய அடையாள அட்டை 29-04-97 அன்று காங்கேசன்துறையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் சண்முகரட்ணம், வட்டுவடக்கு, சித்தன்கேணி என்ற முகவரியில் ஒப்படைக்கவும்.(46684)

சபாரத்தினம் சிவஞானசுந்தரலிங்கம் ஆகிய எனது 592791943 V இலக்கமுள்ள அடையாள அட்டையும் வேலை செய்யும் அடையாள அட்டையும் தட்டாதெரு சந்தியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மூளாய் மத்தி சுளிபுரம் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (46694)

**SPOKEN ENGLISH**

சுலபமாக ஆங்கிலம் பயில ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, இல. 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (46690)

**போட்டோக்கள் தேவை**

யாழ். மக்கள் இடம்பெயர்ந்து தென்மராட்சிக்குப் பெருங் கூட்டமாகச் சென்றபோதோ, திரும்பிய போதோ எடுத்த போட்டோக்கள் வைத்திருப்போர் உடனே தொடர்பு கொள்க:- ஆனந்தா அச்சகம் 226, காங்கேசன்துறைச் சாலை யாழ்ப்பாணம். (46699)



ABSOLUTE CONFIDENCE
BEACON
வழிகாட்டி
THIRUNELVELY

**வணிகக் கல்வி**

ஆசிரியர்
திரு. முரளி
97 A/L
S. M. I யும
முகாமையும்
98 A/L
தொழிலாளரும்
தொழில் கொள்வோரும்
ஆரம்பம்: 7-5-97
மாலை 3.00 மணி
BEACON
கல்வி நிறுவனம்
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
(46695)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும்

மாதமொன்று சென்றாலும் வருடமொன்று கழிந்தாலும் அழுகின்றோம் அழுகின்றோம் அழுதின்னுந் தீரவில்லை ''சந்திரா'' உம் பிரிவாலே தாரணியே கலங்குதையா.



### அமரர் கந்தையா சந்திரதாஸ்

அன்பு, பண்பு, சீவகாருண்ணியம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, விருந்தோம்பல் யாவும் ஒருசேர அமைந்த அட்டசீலரே உங்கள் மறைவு யாவற்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் என் செய்வோம்.

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்ட சந்திரதாஸ் வருவாரோ? வரமாட்டார். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நல்லூர்க் கந்தன் ஆலயத்திலும், சாவகச்சேரி கெருடாவில் கந்தன் ஆலயத்திலும் மோட்ச அர்ச்சனையும் அந்தணர் தானமும் வழங்கப்படும். கைதடி சைவச் சிறுவர் இல்ல சிறுவர்களுக்கு மதிய போசனமும் வழங்கப்படும். நண்பர்கள், உறவினர்கள் யாவரும் அன்புடன் ஏற்றுக் கொள்ளவும்.

ஓம் முருகா

திரு. ந. சிவஞானம் குடும்பத்தினர் ] கெருடாவில்
திரு க. கந்தசுவாமி குடும்பத்தினர் ] சாவகச்சேரி
திரு. இ. புவனேந்திரன் குடும்பத்தினர், கோயில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.

(சி-665)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சின்னையா அம்பிகைபாகன்

அன்னையின் அரவணைப்பில்: 23 – 04 – 1914
ஆண்டவனின் அரவணைப்பில்: 17 – 04 – 1996

**அமாவாசைத் திதி: 6 - 5 - 1997**

ஓராண்டு சென்றது ஐயா!
ஓயவில்லை நம் கவலை ...
அன்பு முகம் பார்க்காமல்
ஆசை மொழி கேளாமல்
ஆறிடுமோ எங்கள் மனம்?
எண்பத்தியிரண்டு வயதினிலே உங்களை
எட்டி வந்து காலனவன் கவர்ந்தானோ.........
ஏங்கி ஏங்கித் தவிக்கின்றோம்
தூங்கி எழுகின்ற போதும்
துயரோடு விழிக்கின்ற எமது
துன்பத்தை யாரறிவார்?
உள்ளே அழுது வெளியே சிரித்து
ஊமையாய் வாழுகின்ற
உண்மையையும் யாரறிவார்?
மீண்டும் நாம் ஒன்றாகச்
சேருமிடம் எப்போது வரும்?
அதையும் தான் யாரறிவார்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்,

இல. 39 கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(46661)

## வயோதிபரின் சடலம்

கடந்த சனியன்று அல்வாய் வடக்கு நாவலடிச் சந்திக்கு சமீபமாக வயோதிபர் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டு பருத்தித்துறை பொலீஸாரால் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இச்சடலம் சிறுப்பிட்டி மத்தியைச் சேர்ந்த நா. குலசிங்கம் என்பவருடையது என்று உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது.

மரணமான இந்த வயோதிபர் சித்த சுவாதீனமற்றவர் என பொலீஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்தது. (இ-173)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 12 — 05 — 1922



மறைவு: 06 — 04 — 1997

### திருமதி முருகேசு நாகம்மா

(எம். எஸ். வீதி, கோண்டாவில்)

எம்மை எல்லாம் அன்பாய், பண்பாய் உருவாக்கிய அம்மாவே, மாமியே, அப்பம்மாவே, அம்மம்மாவே சகோதரியே நீங்கள் எம்மை விட்டு மீளாத் துயில் கொண்டு நாள்கள் முப்பத்தொன்றானாலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சை விட்டு என்றும் நீங்கா. உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நன்றி நவிலல் :

எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதி நிகழ்வில் பங்கு கொண்டோருக்கும், இரங்கல் செய்தி அனுப்பியோருக்கும், உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றிகள்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.


மு. ஐயாத்துரை,
எம். எஸ். வீதி, கோண்டாவில்

(46697)

உ
சர்வம் சிவமயம்

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 12 — 08 — 1942



உதிர்வு: 06 — 05 — 1996

### உயர் சைவத்திரு. பொன்னர் வெற்றிவேலாயுதம் (விஜயன்)

(வெளிக்கள உத்தியோகத்தர் — உணவுத் திணைக்களம், யாழ்ப்பாணம்.)

**ஆண்டுத் திவசம்: 06 - 05 - 1997**

அறங்கிடந்த நெஞ்சும், அருள் ஒழுகும் கண்ணும் கொண்ட உங்கள் ஆத்மா இறைவனடி சாந்தி பெற என்றும் பிரார்த்திக்கும் இதயங்கள்: பாசமிகு மனைவி திருமதி வெ. காந்திமதி, பிள்ளைகள்: சாரதா, சுகர்சன், சுகர்சினி, சயந்தன், சுகந்தினி, மைத்துனர்மார்: ச. கதிரவேலு (பொறியியலாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), ச. கணேசன் (செயலாளர் - திருகோணமலை நகராட்சி மன்றம்), திருமதி நா. இராசமணி, ச. சிவபாலன் (ஜேர்மனி) ஆகியோர்.

06 - 05 - 1997 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஓராண்டு நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம். ஓம் சாந்தி!

பிரிவால் கண்ணீர்ப் பூக்கள் சொரியும்:

**மனைவி, பிள்ளைகள்.**

''விஜயபவான்''
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(46660)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தெளிவுறுமா?

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டுத் தாம் மேற்கொண்டுவரும் முயற்சிகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, இந்தியாவின் புதிய பிரதமர் குஜ்ராலுடன் பேச்சுக்கள் நடத்துவார் என்று செய்திகள் வெளிவந்துள்ளன.

மாலைதீவில் அடுத்த வாரம் தென்னாசிய பிராந்திய நாடுகள் சங்கத்தின் உச்சி மாநாடு நடைபெறுகிறது. அந்த மாநாட்டில் பங்குபற்றும் தலைவர்கள் பரஸ்பரம் அக்கறையுள்ள விடயங்கள் குறித்துப் பேசுவர். இது போன்ற மாநாடுகளில் அத்தகைய சந்திப்புக்கள் வழக்கமானவையே.

எனவே சந்திரிகா — குஜ்ரால் மாலைதீவுப் பேச்சுக்கள் முழு அளவிலான உத்தியோக பூர்வ பேச்சுக்களாக அமையமாட்டா. தேவகௌடா பிரதம அமைச்சராக இருந்த போதும், இலங்கை ஜனாதிபதி இந்தியாவுக்கு தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த போதே இனவிவகாரம் குறித்துப் பேசினார். அதனால் இருவருக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களின் விவரமோ, இருவரினதும் கருத்து நிலைப்பாடுகளோ அல்லது புரிந்துணர்வின் அடிப்படையிலான இணக்க நிலைகளோ குறித்த ஊர்ஜிதமான தகவல்கள் வெளிவரவில்லை.

அடுத்த வாரம் மாலைதீவில் நடைபெறவுள்ள பேச்சுக்களும் தேவகௌடாவுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின் வகையினதாகவே அமையக்கூடும்.

இந்தியாவின் இப்போதைய பிரதமர் குஜ்ரால், வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் இவ்வருடம் ஜனவரியில் கொழும்பு வந்திருந்தார். அப்போது ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு இந்தியா உதவமாட்டாது. இரு நாடுகளுக்கு இடையிலும் இராணுவ ஒத்துழைப்பு இராது— என்று அப்போது கூட்டறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டது.

எனினும்—

இனப் பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பது தெளிவற்ற, கலங்கலான, மங்கலான ஒன்றாகவே இருந்து வருகிறது.

மாலைதீவில் நடக்கவுள்ள குஜ்ரால் - சந்திரிகாசந்திப்பு இது விடயத்தில் ஒரு தெளிவு நிலையை உண்டாக்குமா, அது துலக்கமாகத் தெரியுமா என்பதே இப்போது எழுந்துள்ள கேள்விகள்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் ஒரே அணியில் நின்று செயற்படுவது என்று சந்திரிகாவும் ரணிலும் இணக்கம் கண்ட பின்னர் எழுந்துள்ள புதிய அரசியல் சூழ்நிலையில். இந்தியா எங்கே நிற்கிறது? இது விடயத்தை எவ்வாறுநோக்குகிறது? தன்னை அனுசரிக்காமல் பிரிட்டன் போன்ற நாடுகளின் உதவியுடன் கருமங்கள் நடப்பதனை அது உளப்பூர்வமாக விரும்புகிறதா? மாலைதீவுப் பேச்சுக்கள் இவற்றுக்குப் பகிரங்கமான பதில்களைத் தருமா?

வெளிவிவகார அமைச்சர் கதிகாமர் அவசர அவசரமாக இந்தியா சென்று பிரதமர் குஜ்ராலைச் சந்தித்துப் பேசினார். அதன் தொடர்ச்சியாக மாலைதீவுப் பேச்சுக்கள் அமையும் என்பதால் தெளிவு கிடைக்குமா?

## வன்னியில் இருந்து 72 பேர் நேற்று வேலணைக்கு வந்தனர்

யாழ்ப்பாணம், மே 6

தீவுப் பகுதியிலிருந்து வன்னிப் பெருநிலப்பரப்புக்கு இடம் பெயர்ந்து சென்று வலைப்பாடு, முழங்காவில் பகுதிகளில் தங்கியிருந்த 19 குடும்பங்களைச் சேர்ந்த 72 பேர் அங்கிருந்து புறப்பட்டு ஏழு படகுகளில் நேற்றுக் காலை 10 மணிக்கு வேலணைக்கு வந்து சேர்ந்தனர்.

வேலணை, நயினாதீவு, புங்குடுதீவுப் பகுதிகளைச் சேர்ந்தோரே தீவுப் பகுதிக்கு நேற்று திரும்பி வந்து சேர்ந்தனர்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் மற்றும் அப்பகுதியைச் சேர்ந்த மீனவர் சங்கப் பிரதிநிதிகள் இவர்களை வரவேற்று தேவையான உதவிகளைச் செய்தனர்.

படகுகளில் வந்திறங்கியோருக்கு இரண்டு வார காலத்துக்கான நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன.

ஏற்கனவே வன்னியிலிருந்து தமது இடங்களுக்குத் திரும்பியோர் இங்கிருந்து கடிதம் மூலம் தெரிவித்த விவரங்களை அடுத்தே தாங்கள் படகுகள் மூலம் புறப்பட்டு வந்ததாக நேற்று வந்து சேர்ந்தோர் தெரிவித்தனர். (உ)

## யாழ். விளையாட்டுப் பிரமுகர் கொழும்பில் கௌரவிக்கப்பட்டார்

கொழும்பு, மே 6

யாழ்ப்பாணத்தின் முது பெரும் விளையாட்டுத்துறை நிர்வாகி இ. கனகலிங்கம் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஸ்ரீலங்கா உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் பொதுக் கூட்டத்தில் வைத்து பாராட்டிக் கௌரவிக்கப் பட்டார்.

அவரை கௌரவிக்கும் நிகழ்ச்சி வருடாந்தப் பொதுக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் விசேடமாகச் சேர்க்கப்பட்டிருந்தது.

கூட்ட ஆரம்பத்தில் ஸ்ரீலங்கா உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் மணிலால் பெர்னாண்டோ, இ. கனகலிங்கத்தை மலர் மாலை அணிவித்து வரவேற்றார். நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வந்து மண்டபத்தில் கூடியிருந்த மாவட்ட உதைபந்தாட்டச் சங்கங்களின் பிரதிநிதிகள் கரகோஷம் செய்து வரவேற்றனர்.

தொடர்ந்து ஸ்ரீலங்கா உதைபந்தாட்டச் சம்மேளன தலைவர் மணிலால் பெர்னாண்டோ, ஸ்ரீலங்கா உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் ரி. பேரின்பநாயகம், யாழ். உதைபந்தாட்டச் சங்கச் செயலாளர் அ. தேவராசா மற்றும் ஏ. எஸ். குணரட்ணம் ஆகியோர் கனகலிங்கத்தின் சேவையை பாராட்டி உரை நிகழ்த்தினர். இறுதியில் கனகலிங்கம் நன்றியுரை நிகழ்த்தினார்.

யாழ். உதைபந்தாட்டச் சங்கம், யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தச் சங்கம், ஸ்ரீலங்கா உதைபந்தாட்ட மத்தியஸ்தச் சங்கம் ஆகியவற்றில் உயர்பதவிகளை வகித்துள்ள கனகலிங்கம் சிறந்த விளையாட்டுப் பயிற்சியாளராகவும் உதைபந்தாட்ட விதிகள் தொடர்பான விரிவுரைகளை வழங்குவதில் தேர்ச்சி பெற்றவராகவும் விளங்கியவர்.

கொழும்பு விவேகானந்தா கல்லூரி, யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி, பலாலி ஆசிரிய கலாசாலை ஆகியவற்றின் அதிபராகவும் அவர் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## சேருவலவில் சிப்பாய் பலி

திருமலை மாவட்டம் சேருவல பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய சினைப்பர் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிய வந்தது.

இடது கரை வாய்க்கால் பகுதியில் கால் நடையாக ரோந்து சென்ற படையினர் மீதே புலிகள் சினைப்பர் தாக்குதலை நடத்தியிருக்கின்றனர். (உ-150)

### நாவாந்துறையில்

## தேவாலயம் முன்பாக உள்ள காவலரண் இடம் மாற்றப்படும்

யாழ்ப்பாணம், மே. 6

நாவாந்துறை சென்.மேரிஸ் கோயிலுக்கு முன்பாக உள்ள இராணுவ காவலரண் சுமார் 300 மீற்றருக்கு அப்பால் இடம் மாற்றப்பட உள்ளது.

இங்கு இராணுவ காவலரண் இருப்பதால் சுமார் 80 குடும்பங்கள் வேறு இடங்களில் தற்பொழுது தங்கி உள்ளன.

இது குறித்து நேற்று ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற மாநாட்டில் புளொட் சார்பாகக் கலந்து கொண்ட மாணிக்கதாசன் பிரஸ்தாபித்தார்.

அப்பொழுது இந்த காவலரணை இடம்மாற்றுவதற்கு பிரிகேடியரால் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

காவலரண் இடம்மாற்றப்பட்டதும் இந்தக் குடும்பங்கள் மீண்டும் வந்து குடியமர ஏற்பாடு செய்யப்படும். (இ)

## பொலீஸாரால் மீட்கப்பட்ட தையல் மெசின்கள், மோட்டார்கள்

### உரியவர் ஆதாரம் காட்டி பெறலாம்

யாழ்ப்பாணம், மே 6

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியைச் சேர்ந்த நபர் ஒருவரிடமிருந்து மீட்கப்பட்ட ஏழு தையல் மெஷின்கள், பல்வேறு ரகங்களைச் சேர்ந்த பத்துக்கும் அதிகமான மோட்டார்கள், நான்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் என்பன யாழ்ப்பாணப் பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதாக யாழ். பொலீஸ் வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

அவற்றின் இலக்கங்கள் பற்றிய விவரங்களையும் பொலீஸார் வெளியிட்டுள்ளனர்.

உரியவர்கள் யாழ். பொலீஸ் நிலைய தலைமையக இன்ஸ்பெக்டருடன் தொடர்புகொண்டு, ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலீஸாரல் மீட்கப்பட்ட மேற்படி பொருள்களின் விவரங்கள் அடங்கிய பட்டியலை தமது அலுவலகத்திலும் பார்வையிடலாம் என ஈ. பி. டி. பியின் யாழ். அலுவலக வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத் தமிழ்ப் பெண் தமிழகத்தில் கொலை

கொழும்பு, மே 6

இலங்கையிலிருந்து இடம் பெயர்ந்து தமிழ்நாடு மேட்டுப் பாளையத்தில் இலங்கை அகதிகள் முகாம் ஒன்றில் தங்கியிருந்த அகதிப் பெண் ஒருவர் கடந்த புதனன்று இரவு வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பாக அவரின் மகன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரவு தூங்கிக் கொண்டிருந்த மகன் திடீரென ஆவேசமாக தனது தாயை வெட்டிக் கொன்றதாகக் கூறப்படுகின்றது.

திருக்கேதீஸ்வரத்தைச் சேர்ந்த செல்லம்மா (வயது 60) என்பவரே கொலையுண்டவராவார். அவரின் மகன் பத்மநாதன் (வயது 25) என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார். (உ)

## ராணுவத்தை விட்டு தப்பி ஓடியவர் கைதானவேளை நஞ்சு அருந்தினார்

### தென்பகுதியில் சம்பவம்

இராணுவத்திலிருந்து தப்பியோடியபின்னர் தென் பகுதியில் பலகொள்ளை, கொலைச் சம்பவங்களில் ஈடுபட்டவர் எனக் கருதப்படும் ஒருவரை கொஸ்கொட பகுதியில் வைத்து பொலீஸார் கைது செய்தனர்.

பொலீஸார் அவரைக்கைது செய்ய முற்பட்டபோது அவர் இடுப்பில் போத்தல் ஒன்றில் இருந்த நச்சுத் திராவகம் போன்ற ஒரு பொருளை எடுத்து அருந்தினாராம்.

உடனே அவரை கரகம்பிட்டி ஆஸ்பத்திரிக்கு பொலீஸார் எடுத்துச் சென்றனர். ஆனால் அங்கு வழங்கப்பட்ட மருந்தை உட்கொள்ள அந்த நபர் மறுத்து விட்டார் எனவும், தாம் சாகவே விரும்புவதாக அந்த நபர் கூறினார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தச் சந்தேக நபரின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-150)

## தபாலதிபர் நியமனம் இங்கு 27 பேருக்கு!

யாழ்ப்பாணம், மே 6

வேலை வங்கி மூலம்—ஒருங்கிணைந்த தபால் சேவையின் கீழ் — 27 பேருக்கு யாழ். மாவட்டத்தில் தபாலதிபர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இப்பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட 27 பேரின் பெயர், விவரங்கள் தபால்மா அதிபர் திணைக்களத்தினால் யாழ்ப்பாணத்தில் உள்ள வடமாகாண பிரதி தபால்மா அதிபர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான தகவல் யாழ். அலுவலகத்தினால் சம்பந்தப்பட்டோருக்கு தெரிவிக்கப்பட்டிருப்பதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

வேலை வங்கி நடைமுறையின் கீழ் இந்தப் பதவிக்கு விண்ணப்பித்த சுமார் இருநூறு பேருக்கு சில வாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றிருந்தன. அந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோரில் 27 பேரே தற்போது நியமனம் பெறத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள். (உ)

## புதிய ஜெனரேற்றர்கள் மூலம் விரைவில் மின் விநியோகம்

யாழ். மாவட்டத்தில் மின்சார விநியோகத்தை மேற்கொள்ளவென பிரிட்டிஷ் அரசாங்கத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 4 பாரிய ஜெனரேற்றர்களுள் ஒன்று பருத்தித்துறைப் பகுதிக்கு மின்சார விநியோகத்தினை மேற்கொள்ளவென நேற்று அங்கு எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரியவந்தது.

ஏனைய மூன்று ஜெனரேற்றர்களில் இரண்டு அரியாலை, திருநெல்வேலி ஆகிய பகுதிகளுக்கும் மற்றையது யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையிலுள்ள பகுதிகளுக்கும் மின்சார விநியோகத்தினை மேற்கொள்வதற்காக எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

இந்துக்கல்லூரிக்கு அண்மையில் ஏற்கனவே இருந்த ஜெனரேற்றர் முத்திரைச் சந்தைப் பகுதிக்கும் முத்திரைச்சந்தைப் பகுதியிலிருந்து ஜெனரேற்றர் சுன்னாகத்திற்கும், திருநெல்வேலியில் இருந்த ஜெனரேற்றர் உரும்பிராய்க்கும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இந்த நான்கு ஜெனரேற்றர்களும் உரிய பகுதிகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளதை அடுத்து அப்பகுதிகளுக்கு மின்சார விநியோகத்தை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

### நாளை

**சித்திரை 24**

புதன்கிழமை

திதி: பிரதமை
பின் இரவு 1-38 வரை.
நட்சத்திரம்: பரணி
முற்பகல் 9.49 வரை.
அக்கினி நாளாரம்பம்
கார்த்திகை விரதம்
சுபநேரம்: 4. 25 -5.55
ராகுகாலம் : 11.55-1.25
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## தபால்கள் வந்தன

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் ''லங்கா முடித' கப்பலில் பதிவுத் தபால்கள் உள்ளிட்ட 90 தபால் பொதிகள் காங்கேசன் துறைக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இத்தகவல்கள் ஓரிரு நாள்களில் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டு துரிதமாக விநியோகிக்கப்படும் என யாழ். தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## புனரமைப்பு

பளைப் பிரதேச செயலக பகுதியில் உள்ள கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியன புனரமைக்கப்பட்டு புதிய நிர்வாகத்தினர் தெரிவு நடைபெற்று வருகின்றன.

இந்தச் சங்கங்களைப் புனரமைக்கும் நடவடிக்கைகளில் பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் ம. அழகேந்திரன் ஈடுபட்டுள்ளார். (இ-117)

# பதவி நீக்கம் செய்யப்பட்ட இன்ஸ்பெக்டர் வீட்டில் ரவைகள்

## பொலிஸார் மீட்டனர்

கொழும்பு, மே 6

குளறுபடி வேலைகளுக்காக வேலை நீக்கம் செய்யப்பட்ட றிசேர்வ் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரிடமிருந்து பல சுற்று ரவைகள் உட்பட பல்வேறு பொருள்களைப் பொலிஸார் கண்டுபிடித்தனர். பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அந்த நபர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்.

கடந்த வெள்ளிக்கிழமை பொறளையில் உள்ள அவரது வீட்டில் வைத்து பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

அவரது வீட்டிலிருந்து 7.62 மி.மீ. ரவைகள்-42, 3.03 மி.மீ. ரவைகள்—94, 2.02 மி.மீ. ரவைகள்—52, 0.9 மி.மீ. ரவைகள்—12 மற்றும் 32 கடவுட் சீட்டுக்கள், நான்கு வீடியோ செட்கள், இரு செலுலோர் போன்கள், இரண்டு ரப்பர் முத்திரைகள், ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் நுழைவதற்கான அனுமதிச் சீட்டு ஆகியவற்றைப் பொலிஸார் கைப்பற்றினர்.

இந்தச் சந்தேகநபர் ஆயுதக் கடத்தல் மற்றும் போலி கடவுச் சீட்டு வழங்கல் போன்ற சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (உ-150)

### இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்)

போன்ற கட்டடப் பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு உதவியாக வழங்க இந்திய அரசு முன்வந்துள்ளது.

இப் பொருள்களை இந்தியாவில் இருந்து நேரடியாகவே யாழ்ப்பாணத்துக்கு கப்பல்களில் எடுத்துச் செல்ல பாதுகாப்பு அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது. (உ-2)


எமது ஒறிஜினல் வெளியீடுகள்

★ கார்த்திக், சோனியா, வடிவேலு நடித்த

இளைஞர் அணி

★ ரமேஸ், அரவிந், கஸ்தூரி நடித்த

தென்றல் வரும் தெரு

★ மம்முட்டியின்

ஹிட்லர் தி கிரேட்

குறிப்பு:- யாழ். நகரில் முதன் முதலாக படங்கள் CDயில் பதிவு செய்து வழங்கப்படுகின்றன.

சுப்ப ஸோ

(ரவி ஒளி கானம்)

(சி/669) யாழ்ப்பாணம்


## முக்கிய அறிவித்தல்

### புகைப்படங்கள்

1995 சித்திரை, வைகாசி மாதங்களில் புலோலி ராஜா போட்டோ, கரவெட்டி சிவா போட்டோ, டைமன் போட்டோ ஆகியவற்றில் பிறந்த நாள், திருமணம், பூப்புனித நீராட்டு விழா படம் பிடித்தவர்களும், புலோலி க. செளந்தரராஜாவிடம் படச்சுருள்களை வழங்கி படங்களைப் 'பெற்றுக் கொள்ளாதவர்களும் க. கந்தையா, சாரையடி, புலோலி என்ற விலாசத்தில் 12 – 05 – 1997 க்கு முன் பெற்றுக் கொள்ளலாம்.

- வண்ணன்

புற்றளை,
புலோலி. (சி/671)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பாபநாசம் தையல்நாயகி

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்:

பிரிவால் துயருறும்:
பா. ரெங்கராஜா,
பா. செல்வராஜா.

20, யாழ். வீதி,
யாழ்ப்பாணம். (46756)

திருட்டு, கசிப்பு, விபசாரம் போன்ற

# சமூகவிரோதச் செயல்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை

## ஈ.பி.டி.பி. அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 6

திருட்டு, கசிப்பு, விபசாரம் போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஈ.பி.டி.பி. யின் யாழ். அலுவலகச் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

கசிப்புக் காய்ச்சி விற்பதில் பலர் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவித்து, அவர்கள் செயற்படும் இடங்கள், அவர்களின் நடவடிக்கைகள் ஆகியவற்றை விவரமாகக் குறிப்பிட்டு பல்வேறு முறைப்பாடுகள் எமக்கு எழுத்து மூலமும் நேரிலும் கிடைத்து வருகின்றன.

இது தவிர, மக்கள் இடம்பெயர்வைப் பயன்படுத்தி ஆட்களின் சொத்துக்களை திருடுவோர் எண்ணிக்கையும் கூடி வருகின்றது.

உரிய சட்டக் கட்டுப்பாடுகள் இல்லாததைப் பயன்படுத்தி – குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க எண்ணுவோர் — மக்களின் பலவீனத்தை மூலதனமாக்கி விபசாரம் போன்ற இழி செயல்களை செயற்படுத்தி வருகின்றார்கள்.

இத்தகைய சமூக விரோதச் செயல்களுக்கு எதிராக மக்கள் ஒன்று திரண்டு நடவடிக்கை எடுக்க வேண்டிய காலம் வந்து விட்டது.

இத்தகைய குற்றங்களைப் புரிவோருக்கு எதிராகப் — பொலிஸாரின் உதவியுடன்— உரிய நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்து வருகின்றோம்.

மக்கள் உரிய தகவல்களை எமக்குத் தந்து ஒத்துழைப்பு நல்கினால் இத்தகைய அழிவுச் செயல்களை சமூகத்திலிருந்து முற்றாக ஒதுக்கி விடலாம்.

மேற்படி குற்றச் செயல்களில் ஈடுபடுவதோ, அல்லது அவற்றுக்கு உதவுவதோ அல்லது தூண்டுவதோ, திருட்டுப் பொருள்களை வைத்திருத்தல், விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதோ கடும் தண்டனைக்கு உரிய குற்றம் என்பதை சகலரும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

— இப்படி அந்தக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ)

### அமெரிக்காவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

யும்படியும் அவர் கோரினார்.

புலிகள் நிதி திரட்டுவதற்கான வாய்ப்புகளை அறவே தடை செய்வதன் மூலமே அவர்களை பேச்சு மூலமான தீர்வுக்கு வரும்படி தூண்ட முடியும் என அமெரிக்க அதிகாரிகளிடம் பேராசிரியர் பீரிஸ் கூறினார்.

புலிகளுக்கு தொடர்ந்து நிதி வாய்ப்புக் கிட்டுமானால் அவர்கள் பலமுள்ளசக்தியாக மாறிவிடுவார்கள். அவர்கள் அதற்குப் பின்னர் பேச்சுக்கு ஒரு போதும் வரமாட்டார்கள் என்றும் அவர் அங்கு கூறினார்.

தமது அமெரிக்க விஜயத்தின் வெற்றி குறித்து திருப்தி வெளியிட்ட அமைச்சர் பீரிஸ், ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டு வரும் பொருளாதாரத் திட்டங்கள் மற்றும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஆகியவை குறித்து அமெரிக்க அரசும் திருப்தி வெளியிட்டதாகக் கூறினார்.

ஸ்ரீலங்காவுக்கு மேலும் நிதி உதவி வழங்க உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் முன்வந்துள்ளதாகவும் அவர் சொன்னார்.

இலங்கையில் முதலீடுகளை ஆரம்பிப்பதற்காக அமெரிக்க உயரதிகாரிகள் குழு ஒன்று விரைவில் இலங்கைக்கு வருகைதர இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (உ)

### பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்)

முற்போக்குப்பார்வை கொண்டதுமான தலைமையில் பிரிட்டன் ஆக்கபூர்வமான பங்களிப்பு நல்கும் என நம்புகிறோம்.

''தனது அரசியல் இருப்பு நிலையைச் சுதந்திரமாகத் தெரிவு செய்யும் உரிமைக்காக நீண்டதும் உறுதியானதுமான போராட்டத்தில் ஈடுபட்டு நிற்கும் தமிழ்த் தேசம் தனது நியாயமான அரசியல் உரிமைகளை வென்றெடுக்க உங்களது ஆதரவினையும், உணர்வுபூர்வமான அன்பினையும் வேண்டிநிற்கின்றது''

— இவ்வாறு அந்த வாழ்த்துச் செய்தியில் பிரபாகரன் மேலும் தெரிவித்திருக்கின்றார். (உ-ஐ-21)

### புளியங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

தல் நடத்தப்பட்டது.

உயிரிழந்த மூவரில் ஒருவர் லொறிச் சாரதி; மற்றையவர் கறுப்பையா என்ற பெயருடைய லொறி கிளீனர். மூன்றாவது நபர் பாடசாலை ஆசிரியை எனத் தெரிவிக்கப்பட்டது.

விமானக் குண்டு வீச்சில் புளியங்குளம் ஆஸ்பத்திரியும் சேதமுற்றதாக ஒரு செய்தி தெரிவித்தது.

இந்தச் சம்பவங்களை அடுத்து நிறுத்தப்பட்டிருந்த தாண்டிக்குளம் ஊடான போக்குவரத்து நேற்று மீண்டும் ஆரம்பமானது. (உ-21)

யாழ். 'கொன்வென்ற்' பகுதியில்

## சனியன்று நடந்த சூட்டு சம்பவம்: விசாரிக்க குழு நியமிக்கப்படும்

யாழ்ப்பாணம், மே 6

கடந்த சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மட ஆங்கிலப் பாடசாலைக்குச் சமீபமாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து விசாரிக்க குழு ஒன்றை நியமிக்க நேற்றுக் காலை ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் 'புளொட்' சார்பாக அதன் உப தலைவர் மாணிக்கதாசன், மாவட்டப் பொறுப்பாளர் ஜேம்ஸ் மற்றும் ஈ.பி.டி.பி. சார்பாக ஜெகன், ஈ.பி.ஆர். எல். எவ். சார்பாக றொபேர்ட் ஆகியோர் பங்குபற்றினார்கள்.

யாழ். நகரக் கமாண்டர் பிரிகேடியர் ஜெயசுந்தராவுடன் இவர்கள் நடத்திய சந்திப்பின்போது கடந்த சனிக்கிழமை காலை திருக்குடும்ப கன்னியர்மட ஆங்கிலப் பாடசாலைக்குச் சமீபமாக நடத்தப்பட்ட தாக்குதலில் அப்பாவி இளம் பெண் ஒருவர் காயமடைந்தது குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டு பொது மக்கள் மீதான தாக்குதல் நிறுத்தப்படவேண்டும் என்று கோரப்பட்டது.

சம்பவம் நடைபெற்று சுமார் 20 நிமிடத்தின் பின்பே அந்தப் பெண் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளானதாக சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ் அமைப்புகள் சார்பில் சுட்டிக்காட்டப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்தே இது குறித்து விசாரிக்க குழு ஒன்றை நியமிப்பதாக பிரிகேடியர் ஜெயசுந்தர தெரிவித்தார். (இ)

ஆண்டு 5 புலமைப்பரிசில் பெறுபேறு

## வல்வைமகளிர் வித்தியாலயத்துக்கு 3 மாதங்களின் பின் கிடைத்தது

வடமராட்சி, மே 6

கடந்த ஆண்டு செப்ரம்பர் மாதம் நடைபெற்ற 5ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் வல்வெட்டித்துறை மகளிர் மகா வித்தியாலயத்துக்கு மூன்று மாதங்கள் தாமதித்தேவந்து சேர்ந்துள்ளன.

இவ்வித்தியாலயத்தைச் சேர்ந்த கே. சிந்து, ஆர். அனுஷா, எஸ். சிவராகவன், எம். தெய்வேந்திரம் ஆகிய நான்கு மாணவர்களும் இப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

குடாநாட்டிலுள்ள ஏனைய பாடசாலைகளுக்கு இம்முடிவுகள் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. (ஐ-173)

### மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்)

வைக்கும் குண்டுகளைப் பயன்படுத்தி நகரில் தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து நகரில் சுற்றி வளைப்பு தேடுதல்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

வன்னிப் பிரதேசத்தின் மீது புதிய படை நடவடிக்கையை படையினர் ஆரம்பிக்கவுள்ள தருணத்தில் கிழக்கில் விடுதலைப் புலிகள் தாக்குதல்களைத் தீவிரப்படுத்த ஆயத்தமாகி வருவதாகவும்—

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரை நிலைகுலையச் செய்ய அவர்கள் திட்டமிட்டிருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பருத்தித்துறைக்கு கப்பல்கள்

வடமராட்சி, மே 6

பருத்தித்துறை துறைமுகத்தில் நாளை முதல் மீண்டும் பொருள்கள் கப்பலிலிருந்து இறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொருள்களை இறக்கவென 'டோனாகுளி' அல்லது 'மாஹேறா' கப்பல் நாளை இங்கு வந்து சேரும்.

இங்கு பொருள்களை இறக்கிய 'மெக்ஸ்ஹண்டி' என்ற கப்பல் பொருள்களை இறக்கி முடித்ததைத் தொடர்ந்து கடந்த ஞாயிறு மாலை கொழும்பு புறப்பட்டுச் சென்றது. (ஐ-173)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06-05-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org